3.3.2026

அ.வ.எண்.101/2022

வா.சா.2 செங்கோட்டுவேல் த/பெ.சுப்ரமணி

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

இன்று நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை வந்துள்ளதா என்றால் இல்லை. வாதி அழைத்ததால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் வாதியின் உடன்பிறந்த சகோதரரா என்றால் இல்லை. இறந்துபோன தனசேகரன் கடன் வாங்கிய விவரம் எனக்கு வாதி சொல்லி தெரியுமா என்றால் எனக்கு நேரடியாக தெரியும். வாதியிடம் இறந்துபோன தனசேகரன் பணம் வாங்கும்போது நான் இருந்தேன். நானும், வாதியும் இருக்கும் போது தான் தனசேகரன் பணம் வாங்கினார் என்றால் சரிதான். எவ்வளவு பணம் கொடுத்தார் என்றால் ரூ.6லட்சம் பணம் கொடுத்தார். ரூ.500/-மதிப்புள்ள ரூபாய் நோட்டுக்களாக பணம் கொடுக்கப்பட்டது நான் உடன் இருந்தேன். அப்போது எங்கள் மூவரை தவிர வேறு யாரும் இல்லை என்றால் சரிதான்.

நான் இறந்துபோன தனசேகரரிடம் ஏதும் சீட்டில் சேர்ந்திருந்தேனா என்றால் அப்போது நான் சேரவில்லை. அப்போது தான் வாதி மற்றும் இறந்துபோன தனசேகரன் இடையே நடந்த கொடுக்கல் வாங்கல் பற்றி எனக்கு தெரிய வந்தது. எந்த தேதியில் பணம் கொடுக்கப்பட்டது என்றால் 5.9.2019 ஆகும். அப்போது எந்த வங்கி காசோலை கொடுக்கப்பட்டது என்றால் சிங்களாந்தபுரம் கார்ப்பரேசன் வங்கி காசோலை கொடுக்கப்பட்டது.

காசோலை 10.9.2019 பின் தேதியிட்டு கொடுக்கப்பட்டது. எந்த தேதியில் வசூலுக்கு கொடுக்கப்பட்டது என்றால் அது தெரியவில்லை. காசோலை வசூலுக்கு கொடுக்கப்பட்டபோது தனசேகரன் உயிருடன் இருந்தாரா என்றால் இருந்தார். வழக்கு விவரங்கள் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும், வாதி எனது உறவினர் என்பதால் அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Sd/- S.Sengottuvel

Taken down before/by me in/ open court and read over/ interpreted/
to the witness and acknowledge/ by him/ her to be correct.

Sd/- xxxxxxxxxx.
Sub Judge, Rasipuram.